பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 59

வெள்ளிக்கிழமை
24 ஜனவரி 2025

தை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## பெண்களிடம் கொள்ளை இளைஞர்கள் கைது

» 15

# அமைச்சர்கள், எம்.பி.க்களின் சலுகைகள் பல நிறுத்தம்!

## உணவுக் கட்டணம் நான்கு மடங்கானது எரிபொருள் ஒதுக்கீடுகளும் குறைப்பு

கொழும்பு, ஜனவரி 24

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுவரும் பல சலுகைகள் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளன. இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அறவிடப்பட்டுவந்த உணவுக் கட்டணம் நான்கு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. 15

## பயங்கரவாதச் சட்டத்துக்கு பதிலாக ஆபத்தான சட்டம்

### சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக்கூறிய தேசிய மக்கள் சக்தி, தற்போது அதற்குப் பதிலாக மற்றுமொரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். 15



புலமைப்பரிசில் பரீட்சை

## பெறுபேறுகள் வெளியாகின!

கொழும்பு, ஜன. 24

2024ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று 15

## மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க நடவடிக்கை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 24

மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை உற்பத்தி 15

## நீதிபதி இளஞ்செழியனுக்கு அநீதி இழைக்கிறது அரசு!

### தீவக சிவில்சமூகம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 24

மேன்முறையீட்டு நீதிபதிக்கான பதவி உயர்வுக்காக நீதிபதி இளஞ்செழியன் அரசியலமைப்புக் குழுவுக்கு விண்ணப்பித்த 13

## பொலிஸ் நிலையத்தில் கிளிநொச்சி பெண் சாவு

விசாரணை தேவை என்று நாடாளுமன்றில் வலியுறுத்து » 15



'உந்த கொலைசிப்பில எத்தினை அம்மாமார் பாஸ் பண்ணிச்சினமோ?'

## கோப்பாயில் வீடுபுகுந்து வன்முறைக்குழு அடாவடி

### மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 24

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு அத்துமீறி நுழைந்து அடாவடி 15




### 2023ஆம் ஆண்டில் இடம்பெற்ற

## திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் காண்டீபனிடம் ரி.ஐ.டி. விசாரணை!

யாழ்ப்பாணம், ஜன. 24

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில், சட்டத்தரணி நடராஜர் காண்டீபனை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்று விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் சட்டத்தரணி காண்டீபன் தெரிவித்ததாவது:- ஜனவரி மாதம் 21ஆம் 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவமுகாமிலிருந்து

# மாயமான துப்பாக்கிகள் ரூ.20 இலட்சத்துக்கு விற்பனை

**கொழும்பு, ஜன.24**

**இராணுவமுகாம் ஒன்றிலிருந்து ரி56 ரகத் துப்பாக்கிகள் 70 காணாமற்போயுள்ளமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அவை 20 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

இந்தவிடயம் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. இராணுவமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்தத் துப்பாக்கி வர்த்தகத்தில் இராணுவத்தினர் 13 பேர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் வெல்லம்பிட்டிய பகுதியில் கைத்துப்பாக்கியுடன் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து வெலிகந்தவில் சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர். தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மாத்தறையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து துப்பாக்கி ஒன்றும் இரண்டு கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் துப்பாக்கிகள் 20 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களை 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (எ-6)

## நாடாளுமன்றத்தில்

# தைப்பொங்கல் விழா

கொழும்பு, ஜன.24

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முறையாகத் தைப்பொங்கல் விழாச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை08 மணி முதல் காலை 9.30 மணி வரை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் விழா இடம்பெறவுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், நாடாளுமன்றத் தமிழ் இந்து அலுவலர்கள் சார்பில் விஸ்வலிங்கம் முரளிதாஸ் இணைந்து புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் ஆகியோரின் அனுசரணையில் விழா நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் தைப்பொங்கல் விழா மூலம் விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு இன நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)

# இனவாத முத்திரை குத்தவேண்டாம்

*அர்ச்சுனாவுக்கு எச்சரிப்பு*

கொழும்பு, ஜன. 24

தேசிய மக்கள் சக்தியென்பது இன நல்லிணக்கத்துக்காகச் செயற்படும் அரசாங்கம். எனவே, எம்மீது இனவாத முத்திரை குத்தவேண்டாம் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அர்ச்சுனா எம்.பி. எழுப்பிய சிறப்புரிமைப் பிரச்சினை தொடர்பில் பதிலளித்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்படாமை ஜனநாயக விரோதச் செயலாகும். அவருக்கு (அர்ச்சுனாவுக்கு) நேரம் ஒதுக்கவேண்டியது எதிர்க்கட்சித் தலைவருக்குரிய பொறுப்பாகும்.

எதிர்க்கட்சிக்கு ஒதுக்கப்படும் நேரத்தில் அர்ச்சுனாவுக்கும் இடமளிக்கப்படவேண்டும். அவருக்குள்ள கருத்துச் சுதந்திரத்துக்காக நாம் முன்னிற்போம். நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் அவர் சபை நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடும்.

அதேவேளை இங்கு தமிழ், சிங்களம் என்பது பிரச்சினை கிடையாது. எனவே, எம்மீது இனவாதக் கோணத்தில் விமர்சனங்களை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா முன்வைக்கக் கூடாது - என்றார். (ச-44)

## கனமழையால்

# வவு.வில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழிவு

வவுனியா, ஜன. 24

வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர்மழை காரணமாக செட்டிக்குளம் ஆண்டியாபுளியங்குளம், ராமையன்குளம் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி பாதிப்படைந்துள்ளன.

வவுனியா பாவற்குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையிலேயே அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-110)

# மூச்சுத் திணறல் ஏற்பட்டு குடும்பப்பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில், மூச்சுத் திணறல் ஏற்பட்டு குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த தர்சன் பாமினி (வயது -36) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மூச்சு எடுப்பதற்கு சிரமப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். நாள்பட்ட நுரையீரல் அடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26-27)

# தமிழ் எம்.பி.களுடன் கனடாத் தூதுவர் சந்திப்பு

இலங்கைக்கான கனடாத் தூதுவர் டேவிட் மெக்கின்னன், தமிழ்த் தேசியம் சார்ந்து பயணிக்கின்ற கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பிலுள்ள தூதரக அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். சந்திப்பில் தமிழ் மக்களின் சமகால அரசியல் விவகாரம், புதிய அரசமைப்பு ஆகியவை தொடர்பில் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (ச-27)



### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.01.2025 | வியாழக்கிழமை | 0433 | A | 8 8 5 0 8 8 |

### Super Ball DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.01.2025 | வியாழக்கிழமை | 2699 | X | 10 31 35 39 |

### சனிதா DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.01.2025 | வியாழக்கிழமை | X | 21 31 45 55 | 4860 |

### SASIRI DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 23.01.2025 | வியாழக்கிழமை | 0606 | 03 19 46 |

### லக்ன ராசி DLB

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 23.01.2025 | வியாழக்கிழமை | துலாம் | 21 34 38 62 | 4411 |

### KAPRUKA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 23.01.2025 | வியாழக்கிழமை | M | 02 | 16 20 52 75 | 1875 |

### அத கோடிபதி DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.01.2025 | வியாழக்கிழமை | J | 13 26 47 70 | 2525 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தை மீறினால்

# அரிசி ஆலைகள் இராணுவ வசமாகும்




கொழும்பு, ஜன.24

**சட்டத்தை மீறினால் அரிசி ஆலைகள் இராணுவத்தினரின் பொறுப்பில் கொண்டு வரப்படும். அரிசி ஆலையின் முகாமையாளர் மற்றும் ஊழியர்களின் பங்கேற்புடன் இதனை செய்வோம் என்றுஎச்சரித்துள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாடு மற்றும் அதனோடு இணைந்த பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்கப்பட்டபோதே ஜனாதிபதி இவ்வாறு பதிலளித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரிசி தொடர்பாக தரவுகள் பெருமளவில் திரிவுபடுத்தப்பட்டுள்ளன. வருடம் ஒன்று எவ்வளவு அரிசி உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது எமக்குத் தெரியாது. வருடத்துக்குத் தேவையான நுகர்வின் அளவும் எமக்குத் தெரியாது. இப்படியான நாட்டில் எவ்வாறு தீர்மானம் எடுக்க முடியும்?

அரிசி ஆலை உரிமையாளர்கள் வங்கிகளில் கடன்பெற்றே நெல்லைச் சேகரிக்கின்றனர். அவர்களிடம் நிரந்தரத் தொழில் செய்யும் ஊழியர்கள் உள்ளனர். அரிசியைப் பதுங்கித் தொடர்ச்சியாக ஆலையைக் கொண்டு செல்லமுடியாது. அது அவர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும்.


முதலில் எமக்கு தரவு கட்டமைப்பு அவசியமாகும். நெல்லைக் களஞ்சியப்படுத்தும் எவரும் அரசாங்கத்தில் பதிவு செய்ய வேண்டும் என சுற்றுநிருபம் வெளியிட்டுள்ளோம். அரசாங்கத்தில் நெல்லை பதிவு செய்யாமல் களஞ்சியப்படுத்தமுடியாது.

சட்டத்தை மீறினால் அரிசி ஆலைகள் இராணுவத்தினரின் பொறுப்பில் கொண்டு வரப்படும். அரிசியின் அளவை இராணுவத்தினர் கணக்கிடுவார்கள். வர்த்தக நிலையம் வரை அரிசியின் விலை விற்பனையை கண்காணிக்கப்படும் - என்றார். (எ-இ)

## மோ.சைக்கிளில் பயணித்தவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் றொட்டியாலடி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இணுவில் மேற்கு - செட்டிவளவு பகுதியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை நித்தியானந்தம் (வயது -65) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். வீதியால் சென்றவர்கள் அவரை மீட்டு தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26)



## ஆவரங்கால் விபத்தில் காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவரில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த உதயகுமார் விதுஷன் (வயது-32) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் ஆவரங்கால் பகுதியில் மாடுகளை மேய்த்து நடந்து சென்றவர் மீது மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் மோட்டார் சைக்கிள் சாரதியும் நடந்து சென்றவரும் காயமடைந்த நிலையில் மருத்துமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில் அவர்களில் நடந்து சென்றவரே நேற்று உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ச-23,26,66)

யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில்
FAIR PHARMA (PVT) ITD

இக்கண்காட்சியில் எமது 118 வது காட்சிக்கூடத்திற்கு வருகை தந்து ஆயுள்வேதி வைத்தியர்களிடம் இலவச மருத்துவ ஆலோசனைகளுடன் எமது சிறந்த மருந்துகளை பெற்று பயன்பெறுங்கள்.
யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஜனவரி 24ம் திகதி முதல் 26ம் திகதி வரை காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும்.

இதயத்தின் முக்கியத்துவம்
இதயநாடி நோய்கள் மீள்நிலைக்கு....
நாடி அடைப்புகள் கரைக்கப்படுகின்றன....
எமது முறை எவ்வித அறுவை சிகிச்சைகளுமற்றது

சத்திரசிகிச்சையும், ஸ்ரென்ட் பதித்தலும்தான் சிகிச்சை முறைகளாக நாடி அடைப்புகளுக்கு பரிகாரமாக இருந்தது. எங்கள் இயற்கை மூலிகை தயாரிப்புகள் குறைந்த விலையில், அடைப்புகளை கல்சியப்படிவுகளாக இருந்தாலும் கூட மாற்றுப் பரிகாரமாக அமைகின்றன.

உலகப்பார்வையில் சத்திரசிகிச்சைதான் நாடி அடைப்புகளுக்கு பரிகாரமாக கருதப்படுகிறது

எங்களால் குணப்படுத்தப்படுகிறது
இருதய நோய்
நோய் எதிர்ப்பு சக்தி
புற்றுநோய் தணிப்பு
ஈரல் பாதிப்புகள்
மூட்டு வாதம்
மூட்டு வலி, முதுகு வலி
ஒற்றைத்தலைவலி
புழையழற்சி
மன அழுத்தம்
இருமல் / சளி
படுக்கை புண்கள்
நாட்பட்ட காயங்கள்
நீரிழிவு நோய்கள்
வைரல் தொற்றுக்கள்
பாலியல் குறைபாடு
புரொஸ்டேற் பிரச்சினைகள்



* இலவச மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்

FAIR PHARMA (PVT) LTD
( AYURVEDIC MEDICINE )
இல:116, காலி வீதி, தெஹிவளை
Web: www.ayurveda.lk E-mail: info@ayurveda.lk

Hotline:
0777708310
0777708955
Tel:0114 388 101
0114 388 102

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

ஆடின காலும் பாடின வாயும் மட்டுமில்லை வாங்கின கையும் சும்மா இருக்காது. அடிக்கடி வாங்கிப் பழகிப் போட்டு, திடீரெண்டு ஒண்டுமே வாங்காமல் இருந்தால் உள்ளங்கை அரிக்கத்தான் செய்யும். அப்பிடி சும்மா இருக்கமுடியாமல் நகைக்கடைக்குள்ள போய் தங்கட விளையாட்டைக்காட்டின கும்பல் ஒண்டு கிட்டடியில பிடிபட்டதை அறிஞ்சிருப்பியள். ஆனால் அவை எப்பிடி அந்தக் கடையில 30 லட்சம் ரூபாவை கப்பமா வாங்கினவை எண்டு கனபேருக்குத் தெரிஞ்சிருக்காது.

கடைசிச் சண்டையில இயக்கத்திட்ட இருந்த நகையள், காசுகளை எல்லாம் சில இடங்களில தாட்டுவைச்சவை. அப்பிடி தாட்டுவைச்ச நகையள், காசுகளை பிறகு கொஞ்சப்பேர் போய் கிளறி எடுத்தவை. உப்பிடி இயக்கம் தாட்டு வைச்ச நகையைத் தேடிப்போறவையைத்தான் 'புதையல் தோண்டினவை' எண்டு பொலிஸ் பிடிக்கிறது. அதோட இயக்கத்தின்ர நகை இருக்கெண்டு சொல்லி, பொலிஸ்காரரும் கன இடங்களில நீதிமன்றத்தில உத்தரவு வாங்கித் தேடினவை. ஆனால் அவைக்கொண்டும் கிடைக்கேலை. எண்டாலும் ஒருசிலரிட்ட இந்த நகையள் கொஞ்சம் சிக்குப்பட்டிருக்கு. அவையள் அந்த நகையளை, இஞ்ச தங்களுக்குத் தெரிஞ்ச நகைக்கடையளில குடுத்து வித்துக் காசாக்கி இருக்கினமாம் எண்டொரு கதை ஓடுது. அதில எவ்வளவு உண்மையெண்டு தெரியேலை. கள்ளநகையளைக் கொஞ்சக்காசுக்கு வாங்கிறதுக்கு எண்டு சில கடைக்காரர் இருக்கினமெல்லோ. அதைமாதிரி இயக்க நகையளையும் அவையள் கொஞ்சக்காசுக்கு வாங்கினதெண்டும் கதை. ஆனால் எந்தெந்தக் கடைக்காரர் இப்பிடி இயக்கநகையளை வாங்கினவையெண்டு வித்தவைக்கும், வாங்கினவைக்கும் தான் தெரியும்.

ஏற்கனவே நகையளை விக்கிறதால கடையளோட தொடர்பில இருந்த ஒருத்தர் , இயக்கநகைப் பிரச்சினையைச் சொல்லி வெருட்டினால் கடைக்காரர் பயந்து போய் காசு தருவினம் எண்டு தன்ர சவட்டாளிமாருக்குச் சொல்லியிருக்கிறார். அவற்றை சவட்டாளிமாரில ரண்டு பேர் ஆமி இன்ரலிஜெண்ட்காரர். அவையையும் இந்தக் கள்ளவேலைக்கு சவட்டுச் சேர்த்துக்கொண்டு, 5 அவையளைக் கடைக்கு அனுப்பிப் போட்டு இந்தச் சூத்திரதாரி தூரவா நிண்டு அவைக்கு போனில ஓர்டர் போட்டபடி இருந்திருக்கிறார். ஆமி இன்ரலிஜெண்ட்காரரும் - நாங்கள் ரி.ஐ.டி. உங்கட கடையில இயக்கநகையள் வாங்கினனியள் எண்டு முறைப்பாடு வந்திருக்கு எண்டு சிங்களத்தில கேட்டு வெருட்டி இருக்கினம். வந்தவையின்ர தோரணையையும், கதையையும் வைச்சுப் பார்த்தவைக்கு அவையில டவுட்டே வராது. அதால கடைக்காரரும், உண்மையான ரி.ஐ.டி.க்காரர்தான் வந்திட்டினம் எண்டு வெலவெலத்துப் போட்டினம். - நாங்கள் இயக்கநகை வாங்கிறேலை சேர் அவை சொல்லியும், வந்தவங்கள் அதைக் கேக்கேலை.

அப்ப நாங்கள் இந்த நகையெல்லாம் கொண்டுபோய் செக் பண்ணி கண்டுபிடிக்கிறம் எண்டு சொன்னபடி கடையில இருந்த நகையளை அள்ள வெளிக்கிட்டிட்டினம். உள்ள நகையெல்லாம் குடுத்திட்டு, என்னெண்டு கடையை நடத்த ஏலும்? அதால போனப்போகுதெண்டு வந்தவையோட 30 லட்சம் ரூபாவுக்கு டீல் பேசி அவையை கும்பிட்டு அனுப்பியிருக்கினம் கடைக்காரர். அந்த 30 லட்சத்தை ஆறுபேரும் ஆளுக்கு அஞ்சு லட்சப்படி பிரிச்சு எடுத்திட்டு ஆளுக்கொரு திக்கில மாறிட்டினம். அவைபோன பிறகு தான் லேசா கடைக்காரருக்கு டவுட் வந்து , விசாரிச்சுப் பார்த்தல் 'ரி.ஐ.டி' யில இருந்து அப்பிடி ஆரையும் நாங்கள் அனுப்பேலை எண்டு மேல்மட்டத்தகவல் கிடைச்சிருக்கு, அதுக்குப் பிறகுதான் கடைக்காரருக்கு உண்மையில வந்தவங்கள் கள்ளர் எண்டு விளங்கி , பொலிஸில முறைப்பாடு செய்தவையாம். பொலிஸும் உடனேயே களத்தில இறங்கினதால, ஆறுபேரையும் அப்பிடியே அலாக்கா அள்ளியிருக்கு பொலிஸ்.

எப்பிடியெல்லாம் எங்கட ஆக்கள் ஏமாத்துகினமெண்டு பாத்தியளோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும்காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும். அலுவலகத்தில் அதிகாரிகளின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். உறவினர்களுக்காக செலவுசெய்ய நேரிடும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள். ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.



# யாழ். பல்கலைக்கழகத்தில் 4 ஆவது ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 4 ஆவது இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு, சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். நிரோஷன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, மாநாட்டின் தலைமையாளராகக் கலைப்பீடாதிபதிபேராசிரியர்சி. ரகுராம், சிறப்புரையாளராக பாலகிருஷ்ணன் சிவதீபன் மற்றும் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர், கண்காணிப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் , இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக பொன்விழா ஆண்டின் தொடர்நிகழ்வுகளில் ஒன்றாகவும், பல்கலைக்கழக சர்வதேச மாநாட்டுத் தொடரின் ஓர் அம்சமாகவும் நடைபெற்ற மாநாட்டில் கலைப்பீடத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதாயக் கற்கைகள் சார்ந்த 132 ஆய்வுக்கட்டுரைகள் பட்டப்படிப்பை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. (ச-25, 125)

## ஊடகவியலாளர்களுக்குக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 24

ஊடகவியலாளர்களுக்கான சிறப்புக் கருத்தமர்வும், கலந்துரையாடலும் யாழ்.பிரதான வீதியிலுள்ள மறைநதி கத்தோலிக்க ஊடக மையத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது "ஊடகத்தில் ஒழுக்கவியல்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பிடாதிபதி பேராசிரியர் ரகுராம் சிறப்புரையாற்றுவார்.

ஆர்வமுள்ள ஊடகவியலாளர்கள் அனைவரையும் கருத்தமர்வில் கலந்துகொள்ளுமாறு கத்தோலிக்க ஊடகமையத்தின் இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபன் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-25)

## 'சைவமுட்டை' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 24

ஜீவநதி எங்கட புத்தகங்கள் ஏற்பாட்டில், ஆசி கந்தராஜாவின் பவளவிழா இடம்பெறவுள்ளதுடன், அறிவியல் புனைகதைகள் நிறைந்த "சைவமுட்டை" நூலும், ஜீவநதியின் வெளியீடான ஆசி கந்தராஜாவின் சிறப்பிதழும் வெளியிடப்படவுள்ளன.

இந்த நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வெளியீட்டுரையை பேராசிரியர் க.ஸ்ரீகணேசனும், ஆசியுரையை கலாநிதி ஆறு.திருமுருகனும் ஆற்றுவர். எழுத்தாளர்களான இ.இராஜேஸ்கண்ணன், சி.ரமேஷ், சு.குணேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். வாழ்த்துரைகளை பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஓய்வுநிலை அதிபர் சி.பவளகுமார், எழுத்தாளர் வே. தபேந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ச- 25)

## குடமுழுக்கு

கொடிகாமம் ஜன. 24

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோவில்களில் தென்முக பர்வதவர்த்தனி அம்பாள் பஞ்சதள கோபுர பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனையொட்டி நாளை சனிக்கிழமை கர்மாரம்பம் இடம்பெறவுள்ளது. (ச-40-159)

## சின்னஞ்சூட்டல்

கொடிகாமம், ஜன. 24

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவத்தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் கலந்துகொள்ளவுள்ளார். (ச- 125, 159)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன. 24

சாவகச்சேரி றிபேக் கல்லூரியின் பழைய மாணவர்,ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் கல்லூரியின் நாகேந்திர ராசா மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு பழைய மாணவர்கள் , ஆசிரியர்சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-40-159)

## நூல் வெளியீடு

கொடிகாமம், ஜன.24

மா.ஜெயக்குமாரனின் "கவிதைக்கனியாரம்" எனும் நூல் வெளியீடு சைவப்புலவரும் பண்டிதரும் மருத்துவருமான மா.கணநாதன் தலைமையில் வட்டு இந்துக்கல்லூரியின் பெரும்புலவர் கலாபூஷணம் முருகவேள் அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தே.பா.பிரிவு கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே.மணிமாறன் கலந்துகொள்ளவுள்ளார். ஆசிரியரும் பாரி அறக்கட்டளைத் தலைவருமான ச.நிகேஷ் நூல் அறிமுகவுரையையும், ஆசிரியரும் ஆய்வாளருமான ந.குகபரன் நூல் நயவுரையையும் நிகழ்த்தவுள்ளனர் . (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பில்துறை கடற்கரையில் சட்டவிரோதத் தடுப்பணை!

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜன.24**

**சுழிபுரம் கிழக்கு, சம்பில்துறை கடற்கரையில் சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு தடுப்பணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுழிபுரம் கிழக்கு கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

கடந்த செவ்வாய்க்கிழமை சங்கானைப் பிரதேச செயலகத்தில் விவசாயக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுழிபுரம் கிழக்கு சம்பில்துறைப் பகுதியில் நீண்டகாலமாகப் பராமரிப்பின்றி இருந்த காணியொன்றில் அனுமதிகள் பெறப்படாது எல்லைக்கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுதொடர்பாக நாங்கள் ஏற்கனவே பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். ஜே.சி.பி. வாகனம் மூலம் கடற்கரையில் இருந்து மணல் அகழப்பட்டு முறையற்ற விதத்தில் அந்தக்காணியின் வடக்குப் பக்கம் தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கடல் நீர் வீதிவரை உட்புகும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாகப் பதிலளித்த பிரதேச செயலர், அங்கு எந்தவிதக் கட்டுமானங்களும் மேற்கொள்ள வேண்டாம் என்று எம்மால் உடனடியாகத் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டது. நில அளவைத் திணைக்களத்தின் வரைபடத்தின்படி அண்மையில் உள்ள நீர் வாய்க்கால் தொடர்பாகவும், அனுமதி பெற்ற ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தோம். எம்மிடம் எந்த அனுமதியும் பெறாது கட்டுமானம் தொடர்ந்துள்ளது. இதுதொடர்பாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (எ-125)

# புத்தக அரங்க விழா முதல்நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 24

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 22 ஆவது நிகழ்வு, வட்டு இந்துக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது. .

முதல்நாள் நிகழ்வுகளாக சுதேச மருத்துவரும், சைவப்புலவருமான மா.கணநாதன் தலைமையில், பெரும்புலவர் கலாபூஷணம் அ.முருகவேள் நினைவு அரங்கில், நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடக்க நிகழ்வாக, வரவேற்பு நடனத்தினை நடன ஆசிரியர் சி.கேதீஸ்வரியின் மாணவர்கள் வழங்கவுள்ளனர். அதனைத்தொடர்ந்து "வட்டூர் அப்பன்" என்ற புனைபெயரில் எழுதிவரும் கலைஞர் மா. ஜெயக்குமாரின் 'கவிதைக்கனியாரம்' நூல் வெளியீடு இடம்பெறும். நூல் அறிமுக உரையை ஆசிரியரும் பாரி அறக்கட்டளையின் தலைவருமான ச.நிகேஸ் மற்றும் நூல் நயவுரையை ஆசிரியரும் ஆய்வாளருமான ந.குகபரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், மாவை நித்தியானந்த னின் எழுத்துருவில், பு.கணெசராசாவின் நெறியாள்கையில் 'முட்டை' எனும் நாடகமும் , செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் தயாரிப்பில் சீலனின் நெறியாள்கையில் 'எங்கே எங்கே குடை எங்கே?' எனும் சிறுவர் நாடகமும் இடம்பெறவுள்ளன. நிகழ்வின் விசேட அம்சமான மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பாடசாலை மண்டபத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ச-25)

# கண்காட்சியும் கலை நிகழ்வும்

கொடிகாமம், ஜன. 24

தென்மராட்சிவலய முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வும் சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள கலாசார மத்திய நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்புவிருந்தினர்களாக சமூக சேவையாளர்களான இ.அருள்தாசன் தம்பதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ச- 25, 159)

## 114 ஹெக்ரேயர் நிலம்

# பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்குத் தேவை

யாழ்ப்பாணம் , ஜன. 24

சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கம் முன்னெடுப்பதற்கு 114 ஹெக்டேயர் நிலப்பரப்பை உள்ளீர்க்க வேண்டும் என்று விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துக்கான நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர். இதன்போது கடலை நோக்கியதாக அந்த விஸ்தரிப்பு அமைய வேண்டும் எனவும் 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலையத்துக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்கு இன்னமும் இழப்பீடு வழங்கப்படவில்லை என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை அபிருத்திக்கான நிதிமூலம் தொடர்பில் இம்மாத இறுதியில் வருகை தரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் கௌரவ அமைச்சர் பிமல் ரத்நாயக்காவிடம் இறுதி செய்யலாம் என்றும் விமான நிலைய நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ச-27)

# களவிஜயம்

மன்னார், ஜன. 24

மன்னார் மாவட்டச் செயலக மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், தொழிநுட்ப உலகில் திறமையுடன் பிரவேசிப்பதற்கான அனுபவத்தை உயர்தர மாணவர்களுக்கு வழங்கும் களவிஜய நிகழ்ச்சித்திட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மன்னார் மாவட்டச் செயலக மனித வள அபிவிருத்தி இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்ற களவிஜயத்தின் போது உயிலங்குளம் மற்றும் பண்ணைவெட்டுவான் தொழிநுட்பக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு தொழிற்கல்வி கற்கைகள் தொடர்பாக நிபுணத்துவ விளக்கங்கள் அளிக்கப்பட்டன. (ச-25, 213)







பசுந்தேசம் அமைப்பும் பொது அமைப்புகளும் இணைந்து ஏற்பாடுசெய்த குருதிக்கொடை முகாம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பசுந்தேசம் அமைப்பு, 'விதையனைத்தும் விருட்சமே' அமைப்பு, இயற்கையின் நண்பர்கள் இயக்கம் உள்ளிட்டபொது அமைப்புகளின் உறுப்பினர்கள் குருதிக்கொடை வழங்கினர். (எ-41-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடி சட்டநடவடிக்கை பாயும்!

## கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடித்தொழில் நடவடிக்கைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை பிரயோகிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் அறிவித்துள்ளார்.**

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் மாவட்ட கடற்பரப்புக்களில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

இதன்காரணமாக மீன்வளம், கடல் வளம் என்பன அழிவடையும் பாதகமான நிலை உருவாகுகின்றது.

அந்தவகையில் இதனைத் தடுப்பதற்கு கடற்படையினர், இராணுவத்தினர், விமானப்படையினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சங்கங்களுக்கு கடிதம் மூலம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (ச-27.66)

## பரு. மரக்கறி சந்தை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

பருத்தித்துறை மரக்கறி சந்தை தொடர்பான வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மரக்கறி சந்தையைப் புதிய கட்டடத்துக்கு இடம்மாற்றுவது தொடர்பில் மரக்கறி வியாபாரிகளால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்வரும் 31ஆம் திகதிக்கு தவணையிட்டு, அந்தக் காலப்பகுதிவரையில் மரக்கறி சந்தை தற்போது இயங்கி வருகின்ற இடத்தில் இயங்க முடியும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ச-27)

## சனசமூக நிலையத்தில் விஷமிகள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜன. 24

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசர் சனசமூக நிலைய கண்காணிப்புக் கமராக்கள் இனந்தெரியாத நபர்களால் அடித்து உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளனவென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த சனசமூக நிலையத்தில் அண்மைக்காலமாக புதினப்பத்திரிகைகள் உள்ளிட்ட பொருள்கள் நாளாந்தம் களவாடப்பட்டு வந்தநிலையில் பாதுகாப்புக் கருதி நிர்வாகத்தினரால் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டன.

இந்தநிலையில் அவற்றையும் விஷமிகள் ஒருவாரத்துக்குள் உடைத்தெறிந்துள்ளனர். இதுதொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையம் மற்றும் பிரதேசசபை ஆகியவற்றில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-125)

### வாள்வெட்டுச் சம்பவம்

## சரணடைந்தவர்களுக்கு 3 ஆம் திகதிவரை மறியல்

யாழ்ப்பாணம், ஜன.24

தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் மீது பருத்தித்துறையில் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாகச் சரணடைந்த சந்தேக நபர்கள் மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்தவாரம் புதன்கிழமை நடந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர்கள் தேடப்பட்டுவந்தநிலையில், மூவர் சட்டத்தரணியின் ஊடாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை சரணடைந்தனர். சந்தேகநபர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-100)

## கலைநிகழ்வும் சாதனையாளர் கௌரவிப்பும்!

யாழ்ப்பாணம், ஜன. 24

அளவெட்டி சைவ வாலிபர் சங்க அறநெறிப் பாடசாலையின் தைத்திருநாள் கலைநிகழ்வும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் தலைவர் வ.நல்லதம்பி தலைமையில் சைவ வாலிப சங்க திருவடி நிழல் மடாலயத்தில் நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன்,சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் சி. சுதீஸ்னர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-22)

## கோழிஇறைச்சி, முட்டைக்கு நிர்ணயவிலை இல்லை

### நுகர்வோர் விசனம்

யாழ்ப்பாணம் , ஜன. 24

கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றுக்கு நிர்ணய விலையின்மையால் இடத்துக்கிடம் வேறுபட்ட விலையில் விற்பனைசெய்யப்படுகின்றன என்று நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கோழி இறைச்சி ஒவ்வொரு இடங்களில் ஆயிரத்து 100 ரூபா முதல் ஆயிரத்து 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. அதேபோன்று முட்டையும் 30 ரூபா முதல் 35 ரூபா வரையில் வேறுபட்ட விலையில் விற்கப்படுகின்றது என் றும் நுகர்வோர் குறிப்பிட்டுள்ளனர். (ச-17)

# இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் மீண்டும் திறப்பு

### குடிமனைகளுக்குள் வெள்ளம்; மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜன. 24

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் 14 வான்கதவுகளும் நேற்றுமுன்தினம் காலை திறக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் இருப்பிடங்களுக்குள் வெள்ள நீர் உட்புகுந்ததுடன் உள்ளகப் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையால் கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம் உள்ளிட்ட நீர்பாசனக் குளங்கள் வான்பாய்ந்து வருகின்றன. இதனால் கண்டாவளை, கோரக்கன்கட்டு, முரசுமோட்டை, ஊரியான் உள்ளிட்ட தாழ்நிலப்பகுதியில் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை குறித்த சீரற்ற வானிலையால் சரிந்து விழுந்த மற்றும் ஆபத்தான நிலையிலுள்ள மரங்களைப் பாதுகாப்பாக அகற்றி போக்குவரத்தைச் சீர்செய்யும் பணியில் அரச மரக்கூட்டுத்தாபனத்தினர் ஈடுபட்டுள்ளனர். (ச-27-113,214)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**நாளொரு நல்வார்த்தை**

நம்பிக்கை என்பது கண்விழித்திருக்கும் தருணத்தில் காண்கிற கனவு.

– பிளினி –


உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வறட்டுத் தத்துவங்கள் வேலைக்காகாது


ஈழத் தமிழர்களுக்கான தீர்வு உடனடிச் சாத்தியமல்ல என்று தெரிவித்துள்ளார் இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய மகளிர் அணியின் தலைவியும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன். ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை எவராலும் முன்வைக்கமுடியாது என்றும், மாறாக இந்தப் பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒரு தொடர்ச்சியான முயற்சியாகும் என்றும் அவர் கூறியிருக்கின்றார். ஈழத் தமிழர்களுக்கான தீர்வு என்பது இன்று, நேற்று பேசப்படும் விடயம் அல்ல, அது பல தசாப்தங்களாகத் தொடரும் பிரச்சினை என்பது ஒருபுறமிருக்க, இந்தியா ஈழத்தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க இதயசுத்தியுடன் முனைகின்றதா என்பதும் ஆராயப்படவேண்டிய ஒன்றாக இருக்கின்றது.

இலங்கையின் சிறுபான்மை மக்களான ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியாக அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டே வந்துள்ளனர். பௌத்த மேலாதிக்கச் சிந்தனையால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள், அடக்குமுறைகளே தமிழ் மக்களை போராட்டம் நோக்கி உந்தித்தள்ளியது. தங்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிரான தமிழ்மக்களின் சாத்வீகப்போராட்டம் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டபோது வேறு வழியின்றி ஆயுதப்போராட்டத்தைக் கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. தமிழ் மக்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக முன்னெடுத்த ஆயுதப்போராட்டம் உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் மௌனிக்கப்பட்டது. இது அனைவருக்கும் தெரிந்த நெடிய வரலாறு. ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களில், இந்தியா பல இடங்களில் தொடர்புபட்டிருக்கின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் பிராந்திய வல்லரசான இந்தியாவும் அதில் பங்களித்திருந்தது. பலகோடித் தமிழர்கள் வாழும் அயல் நாடான இந்தியா - ஈழத்தமிழ் மக்களின் கோரிக்கைகளின் நியாயத்தைப் புரிந்துகொண்டு, எதிர்பார்க்கும் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கையில் ஈழத்தமிழர்களும் இந்தியாவின் தலையீட்டை எதிர்பார்த்தனர் அல்லது விரும்பினர் என்றே கொள்ளலாம். ஆனால் பல சந்தர்ப்பங்கள் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையே தந்திருந்தன. பிராந்திய கேந்திரமுக்கியத்துவம் மிக்க இடத்தில் உள்ள இலங்கையை அதட்டிக் காரியம் சாதிப்பதற்கு பிராந்திய வல்லரசான இந்தியா இப்போதுவரையில் தயக்கத்துடனேயே இருக்கின்றது.

வானதி சீனிவாசன் ஈழத்தமிழர்களுக்கான தீர்வு உடனடிச் சாத்தியமல்ல என்று கூறினாலும், கடந்தகாலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களில் இந்தியா ஈழத்தமிழர்களுக்கான தீர்வை நோக்கி இலங்கையை உந்தித்தள்ளவில்லை என்பதையும் அவர் கவனத்தில் கொள்ளவேண்டும். இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு உடனடிச் சாத்தியமற்றது என்றே வைத்துக்கொண்டாலும், அந்தத் தீர்வுக்கான எந்த முயற்சியும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்ற உண்மையையும் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். இந்தியாவோ அல்லது தமிழர் விடயத்தில் தலையிடும் சர்வதேச நாடுகளோ பிராந்திய நலனையும், தங்களது நலன்களையும் முன்னிறுத்தியே இதுவரை காரியமாற்றுகின்றனவே தவிர, தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் செயலாற்றவில்லை. தமிழ்மக்கள் எதிர்பார்ப்பது ,காலத்தை இழுத்தடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நாடகச் செயற்பாடுகளை விடுத்து, இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான காத்திரமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதையே. அந்த வழியை நோக்கி இலங்கையை பிராந்திய வல்லரசான இந்தியா வழிப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. போரால் நலிந்துள்ள வடக்கு, கிழக்கு மீள்கட்டுமானத்துக்குப் பெரிதும் கைகொடுத்தது இந்தியாவே. இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்த போது இந்தியா, இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவாக எட்டுவதற்குக் காத்திரமான அழுத்தத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அந்த நேரத்தில் இலங்கை அரசும் வேறுவழியின்றி தீர்வைக் கொடுக்க முயன்றிருக்கும். இப்படி கைக்கெட்டிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தாத இந்தியாவில், வானதி சீனிவாசன் போன்ற ஆளும் பா.ஜ.க. கட்சியின் பிரமுகர்கள் வறட்டுச்சித்தாந்தங்கள் பேசிக் காலத்தைக் கடத்துகின்றனர். இந்தியாவின் இத்தகைய போக்கும் இனப்பிரச்சினை இங்கு நீடிப்பதற்கு முக்கியமான காரணம் என்பதை எப்போதுதான் அவர்கள் உணர்ந்து கொள்ளப் போகின்றார்கள்?



# தாஜுடீன், லசந்த கொலை; விசாரணைகளில் சிக்கல்



## ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 24**

**பிரபல ரக்பீ வீரர் வசீம் தாஜுடீன் மற்றும் பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க ஆகியோரது படுகொலைகள் குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைகள் இடம்பெற்று நீண்டகாலம் ஆகின்றது.

16 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதில் விசாரணையாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவர் தற்பொழுது உயிருடன் இல்லை.

தாஜுடீன் கொலையுடன் தொடர்புடைய சட்டமருத்துவ அதிகாரியும் இறந்துவிட்டார்.

எனினும் விசாரணைகளில் சிக்கல்கள் ஏற்பட்டாலும் நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## அடுத்தமாதம் முதல் டிஜிற்றல் அட்டைகள்

கொழும்பு, ஜன.24

கைவிரலடையாளம், முக அடையாளத்துடன் மற்றும் சுவடிய டிஜிற்றல் அடையாள அட்டைகள் விநியோகிக்கும் பணி அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும் என டிஜிற்றல் பொருளாதார பிரதியமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். ஆறு மாத காலப்பகுதியில் தற்போது பாவனையிலுள்ள அடையாள அட்டைகள் மீளப்பெறப்பட்டு அவற்றுக்குப் பதிலாக டிஜிற்றல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# திருமண வயது நிர்ணயம் சட்டம் கொண்டுவாருங்கள்

கொழும்பு, ஜன. 24

அனைத்து சமூகங்களுக்கும் ஒரேவிதமான திருமண வயதை நிர்ணயிக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்படவேண்டுமென நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். சிறுவர்கள் என்ற வரையறையின் கீழ் சிறுவர்களின் வயதெல்லையும் நிர்ணயிக்கப்படவேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-25,66)

## மலையக மக்களுக்கு புதிய வீடுகள்

பெருந்தோட்ட மக்களுக்காக இந்த ஆண்டு 4,350 வீடுகள் கட்டப்படும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார். 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் 4350 வீடுகள் கட்டப்படும். 2026 ஆம் ஆண்டில் மேலும் 4350 வீடுகள் கட்டப்பட்டு அந்த வீடுகளும் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# மாணவர்களுக்கு பாதணிகள்

250 மாணவர்களுக்குக் குறைவாக கல்விபயிலும் பாடசாலைகளில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பாதணிகள் வழங்கப்படும் என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவர்களுக்கென பல நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். அதில் ஓர் அங்கம்தான் பாதணி வழங்கும் வேலைத்திட்டம். சுமார் 7 இலட்சம் மாணவர்களுக்கு இவ்வருடத்தில் பாதணிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



நாளை
சனிக்கிழமை - தை - 12
25.01.2025
சுபநேரம் : 03.36 - 05.06
ராகுகாலம் : 09.36 - 11.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

15th EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

**JITF 2025**

**24 25 26 JANUARY ஜனவரி**

10.30மு.ப - 8.30பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort) | முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

# இன்று ஆரம்பம்

www.jitf.lk



Message from
## N. Vethanayahan
**Governor**
**Northern Province**

The Greeting message from the Hon. Governor On behalf of the Chamber of Commerce & Industry of Yarlpanam (CCIY), we are proud to continue supporting the 15th Jafina International Trade Fair. As always, we are committed to ensuring its success and offering even greater support this year. It is an honor to be part of this significant event, and we look forward to its positive impact on the community and economy. The trade fair will feature over 350 exhibitors from Sri Lanka and India, showcasing local products and services. It connects businesses, promotes trade, and expands markets in sectors like food, jewelry, crafts, machinery. furniture, and textiles. Small, medium, and large industries drive economic growth, create jobs, especially for women and youth, and support long-term development and innovation.

This sector is key in Sri Lanka as it develops both rural and urban areas. Small and medium businesses add value to resources, reduce waste, create jobs, boost exports, and bring in foreign money. They also create diverse products and help market them, growing our region's share in local and global trade. The Jaffna International Trade Fair is an important event for businesses in the north, helping them connect with Colombo and other areas. Trade fairs are a strong way to market products and give visitors a clear view of the whole market and industry.

I am confident that with the strong support of the media, CCIY, and Lanka Exhibition & Conference Services Pvt Lid, we will promote the event across the Jaffna peninsula. This will give exhibitors great opportunities. On behalf of CCIY, I assure you that the chamber is always ready to help and make sure everything is set up to support businesses.

In a democratic republic, the media plays a key role in sharing information. I thank the press for their support in promoting the Jaffna International Trade Fair over the past 13 years and hope for continued support this year. I invite all media representatives to attend the I5th fair's opening and appreciate your ongoing support for the success of the 14th fair.

We've faced challenges before and know how to overcome them. With our history, I'm confident we can adapt and succeed in a changing economy. This fair showcases innovative companies and, by harnessing its potential and the people of Jaffna, will continue to grow and succeed each year.



Message from
## Dr. V. K. Vignesh PhD.
**Chairperson of JITF 2025 / Executive Director**
**Chamber of Commerce and Industries of Yarlpanam.**

Jaffna International Trade Fair "JITF" has become generally recognized and an integral part of economic development not only of business circles of the Northern Region but also of the whole Country. Every year entrepreneurs of North, South, and other regions of Sri Lanka and neighbouring countries actively participate in the trade fair. The 15th Jaffna International Trade Fair took a special place in the formation and maintenance of the image of domestic producers, as it provided ample opportunities to demonstrate products and services. This is a platform to present the potential and opportunities of the region. The scale of expositions at the past exhibitions and the activity of participants shows that the fair is gradually becoming a traditional event for producers, entrepreneurs, and investors all over Sri Lanka.

The economic significance of the fair is an image event, which includes trade and economic, science and technology, cultural and educational components, where different sectors of the economy are represented with their goods and products. In addition, this platform provides an opportunity for an active dialogue between all participants, establishing direct contacts with buyers aimed at enhancing economic growth, sustainable development, and strengthening regional cooperation and trade. I believe that this event will continue to contribute to the strengthening of economic and business relations, strengthening communication between suppliers and potential customers, demonstrating achievements and new trends in the industry, agro-industrial complex, the development of small and medium-sized businesses in the Northern Region and the entire country.

I sincerely hope that all our exhibitors have a successful and rewarding experience at the trade fair.



Message from
## Arjun Dharmadasa
**Managing Director**
**Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd**

It is with great honour that I welcome you to the 15th edition of the Jaffna International Trade Fair, which is organized by Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd. The 14th edition was a resounding success, featuring over 300 stalls with 200 participating companies and an impressive visitor count exceeding 60,000. The Jaffna International Trade Fair (JITF) has indeed played a significant role in boosting the growth of the economy of Jaffna. By providing a platform for businesses to showcase their products and services, the event promotes trade, entrepreneurship and investment in the region. The event attracts businesses from across Sri Lanka and international exhibitors, encouraging trade partnerships and creating opportunities for local entrepreneurs. Local businesses and artisans can showcase their unique products, gain visibility and access new markets. The event serves as a networking platform and encourages local and foreign investment in Jaffna's growing economy.

Since its inception, the Jaffna International Trade Fair has made significant strides, becoming a catalyst for the city's economic and social development. It has fostered the growth of local enterprises, opened doors to trade opportunities, Economic & Tourism Growth, Enhancing Market Access, Strengthening SME Development, Business Networking Opportunities and strengthened Jaffna's position as a dynamic hub for trade and investment.

This year, we continue to celebrate a diverse range of exhibitors representing sectors such as Food & Beverage, Packaging, Agriculture, Apparel & Textile, Automobiles, Cosmetics & Jewellery, Construction Machinery & Heavy Equipment, IT, Education, Plastic & Rubber products, Financial Services, and many more. The event attracts an array of visitors, including Provincial government agents and officials, members of the Jaffna business community, Trade Export Promotion Councils, students, local organizations, and many other notable attendees.

I would like to take this opportunity to express my gratitude to all government officials and organizations whose invaluable support made this event possible. This landmark event represents years of dedication and collaboration, and its success would not have been possible without the unwavering support of our sponsors, exhibitors, and visitors. A special note of thanks goes to the Chamber of Commerce and Industries of Yarlpanam, for their unwavering contributions to the growth and prestige of this trade event.

As we celebrate this 15th milestone, we recognize not just an event, but a growing movement that continues to shape the future of Jaffna and its people. I invite you to explore, engage with, and take full advantage of the opportunities this platform offers.

Thank you for being a part of this incredible journey.



Message from
## Aasim Mukthar
**Chief Executive Officer**
**Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd**

The northernmost tip of the country, its capital, will be set alight for the 15th consecutive year with the commencement of the Jaffna International Trade Fair (JITF) 2025 from the 24th to the 26th of January.

The exhibition, which has become 'a must-attend' event among the citizens, businessmen, traders, and entrepreneurs of the North, will be held at the Muttraweli Grounds Jaffna, at the heart of the peninsula.

The trade fair, which comprises all types of industry stalls, caters to various needs and services and has been considered the single most important focal point for a wide spectrum of businesses, investors, and citizens.

Organizing the 15th edition of JITF ensures that the northern region is still one of Sri Lanka's prime untapped markets in terms of trade and investment. This event is undoubtedly considered the most focused exhibition and trade fair in Jaffna.

I take this opportunity to welcome all exhibitors, delegates, and visitors to Jaffna while thanking and wishing all our valued sponsors and exhibitors the very best at JITF.

I also wish to convey my sincere thanks and gratitude to all stakeholders who have supported us immensely in making this year's JITF a success.

PLATINUM SPONSOR | GOLD SPONSORS | SILVER SPONSORS | OFFICIAL SPONSORS | ORGANIZED BY

DIMO | NIPPON CEMENT | FINE | Maxies | LECS LANKA EXHIBITION | IN ASSOCIATION WITH CCIY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யாழ்ப்பாணம்' எனும் பெயரை நீக்கியமை அவமதிப்புக்குரியது

## இந்தியத் துணைத்தூதுவருக்கு சீ.வி.கே.சிவஞானம் கடிதம்



**யாழ்ப்பாணம், ஜன. 24**

**இலங்கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான 'யாழ்ப்பாணம்' என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித்ததற்குச் சமமாகும். 'யாழ்ப்பாணம்' என்பது விட்டுக்கொடுக்கமுடியாத எம் இனத்தின் அடையாளம். எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்ய வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பதில் தலைவர் சீ.சி.கே.சிவஞானம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் இந்திய துணைத்தூதுவர் சாய்முரளியைச் சந்தித்து கடிதம் ஒன்றை சமர்ப்பித்து அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்திய மத்திய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தின் பெயர் 'திருவள்ளுவர் கலாசார மையம்' என மாற்றப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை பற்றிய அறிதல் எதுவும் இந்த மண்ணின்அரசியல்தலைவர்களுக்கோ பிரதிநிதிகளுக்கோ சிறிதளவேனும் தெரிந்திருக்கவில்லை.

தெய்வப் புலவர் ஐயன் திருவள்ளுவருக்கு நாமாகவே இந்த மண்ணில் பல இடங்களில் உருவச்சிலைகள் அமைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல ஔவைக்கும், மாகாத்மாகாந்திக்கும், பாரதிக்கும் இங்கு சிலை எடுத்தவர்கள் நாங்கள். தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

எனினும் 'யாழ்ப்பாணம்' என்பது விட்டுக்கொடுக்க முடியாத எம் இனத்தின் அடையாளம் ஆகும். இலங்கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான 'யாழ்ப்பாண' என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித்ததற்கு சமமாகும். இது இந்தியாவுக்கும் எமக்குமிடையேயான நல்லுறவில் ஆழமான குழியாக அமைந்துவிடக்கூடாது. எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யவேண்டும்- என்றுள்ளது. (ச-125-20,66)

# இந்தியா மீதான நம்பிக்கை பெயர்மாற்றத்தால் சரிந்தது

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 24

**கலாசாரப் பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கலாசார நிலையம் 'திருவள்ளுவர் கலாசார நிலையம்' எனப் பெயர் மாற்றப்பட்டமை மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல். இந்தச் செயலால் ஈழத்தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் பெரும் நம்பிக்கை ஒரு படி கீழிறங்கியுள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணக் கலாசார மையம் இந்தியா எமக்கு உவந்தளித்த தனித்துவமான பெரும் கொடையாகும். தற்போது அதன் பெயர் மாற்றப்பட்டிருப்பதன் மூலம் அதன் தனித்துவம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-25,66)



இலங்கை வங்கியின் சிறுப்பிட்டி கிளையினால், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் பாடசாலை சேமிப்பு கழகம் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது. (ச-25, 17)

# புத்தகப்பை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தால் வலி வடக்கு, தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டுவருகின்றன.

பொருண்மியம் நலிவுற்ற மாணவர்கள் எவருமிருப்பின் அவர்களின் சரியான விவரங்களை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் 077 027 9693 என்ற WhatsApp இலக்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-25,9)

# மத்திய அரசின் நிதியொதுக்கீடு கடந்த ஆண்டு திரும்பவில்லை!

## யாழ்.மாவட்டச் செயலகம் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 24

மத்திய அரசாங்கத்தால் கடந்த ஆண்டு யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்ட நிதியில் எந்தவொரு நிதியும் மீளப்பெறப்படவில்லை என்று யாழ். மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் என்.எஸ்.ஆர் .சிவரூபன் தெரிவித்துள் ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்கென 704 கோடியே 13 இலட்சத்து 96 ஆயிரத்து 616 ரூபா மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-125)

# பொன்னாலை – காரைநகர் பாலம் புனரமைப்பு நிறைவு

யாழ்ப்பாணம், ஜன. 24

பொன்னாலை - காரைநகர் வீதியின் பாலம் அபிவிருத்தி அதிகாரசபையால் காப்பெற் இடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக இரவு பகலாகப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவந்த நிலையில் தற்போது பணிகள் நிறைவுக் கட்டத்தை அடைந்துள்ளன. (ச-66)



# வீட்டில் கஞ்சா; ஒருவர் கைது

சாவகச்சேரி, ஜன.24

சாவகச்சேரி - கோயிற்குடியிருப்புப் பிரிவில் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த சந்தேகநபரின் வீட்டைச் சோதனையிட்டபோதே இரண்டு ரின்களில் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-25,9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு "Education யாழ்ப்பாணம்" ஏழாம் அமர்வு

ICFS (International Centre for Foreign Studies) சர்வதேச வெளிநாட்டு கற்கை மையம் ஏற்பாடு செய்துள்ள " Education யாழ்ப்பாணம்" ஏழாம் அமர்வு ஜனவரி 25ம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை Hotel Jetwing Jaffna வில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு வடக்கு மாகாணத்தில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு இங்கிலாந்து ,அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, , கனடா, மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள கல்வி தொடர்பான தெரிவுகளையும், விருப்பங்களையும் ஆராய்வதற்கான வாய்ப்புகளை வழங்கும் முயற்சியின் ஏழாவது கட்டமாகும்.

"Education யாழ்ப்பாணம்" நிகழ்ச்சித் திட்டத்தின் சிறப்பு அம்சம் தலைநகர் மற்றும் கற்கை வசதிகளைக் கொண்ட பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புகளை, வடக்கு மாகாணத்திலுள்ள தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதேயாகும். இலங்கையர் அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்க ICFS எப்போதும் உறுதிபூண்டு செயலாற்றிவருகின்றமை குறிப்பிடக்கூடிய தாகும். இம்முறை விஷேடமாக ICFS உடன் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்காக 1000 GBP புலமைப்பரிசில்கள் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது

இங்கு முதன்மைப்படுத்தப்படுகின்ற கற்கைகளுக்காக நாடுகள் பாரிய பணச் செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும், நிதி பங்களிப்புகள் சலுகை அடிப்படையில் வசதிகளை ஏற்படுத்தும் வகையிலும் அறிமுகப்படுத்துகின்றன. குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்கள், விண்ணப்பதாரர்களின் வசதியைக் கருத்திற்கொள்வதுடன் இந்தச் சந்தர்ப்பம் "Education யாழ்ப்பாணம்" மூலம் கிடைக்கும் தனித்துவமான வாய்ப்பாகும்.

இலங்கையில் தங்களுடைய குடும்பத்தை விட்டு வெளியேறத் திட்டமிடாத அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் Research Master options அவர்கள் சார்ந்து நிற்கின்றவர்களுடன் (Dependent Visa) இங்கிலாந்துக்குச் செல்லும் வாய்ப்பை அவர்கள் அறிமுகப்படுத்த முனைகின்றார்கள்.

ICFS வடக்கில் உள்ள அனைத்து திறமையான மற்றும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இந்த அரிய வாய்ப்பை அதிகபட்சமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறது.

அங்கு நீங்கள் இது தொடர்பிலான தொழில் வல்லுநர்களைச் சந்தித்து ICFS உடன் வெளிநாட்டில் கல்வியைத் தொடர உங்கள் எதிர்கால இலக்கை அடைவதற்கான வரைவை இங்கு சமர்ப்பிக்கமுடியும். ICFS இன் இந்த செயலமர்வுக்கு எந்தவித நுழைவுக் கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்பதையும், ICFS இன் ஆலோசனைகளுக்கு எவ்வித கட்டண வசூலிப்பும் இல்லை (No consultant fees) என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது வடக்கில் உள்ள தகுதியான மாணவர்களுக்கு ஒரு விலைமதிப்புள்ள வாய்ப்பாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## சைவநெறி, தமிழ்மொழி நுண்ணறிவுத் தேர்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 24

அகில இலங்கை சைவபரிபாலனசபையால் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற சைவநெறி மற்றும் தமிழ்மொழி நுண்ணறிவுத் தேர்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

விண்ணப்பித்த மாணவர்கள் தமது பாடசாலை ஊடாகத் தேர்வில் பங்குபற்றுமாறும் மேலதிக தகவல்களை அதிபர் ஊடாக அறிந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)

# இளங்கலைஞர் மன்றம், நல்லூர்

புலம்பெயர் உறவுகள் மற்றும் கலைஞர்களின் ஆதரவுடன்
புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழாவும் இசை விழாவும்

## அழைப்பிதழ்

(25.01.2025-27.01.2025)



**முதலாம் நாள் நிகழ்வுகள் :**
காலம் - 25.01.2025 சனிக்கிழமை
நேரம் - காலை 9.00 மணி
இடம் - மன்ற கலா மண்டபம் - நல்லூர்

**தலைமை :**
கௌரவ சி.வி.கே. சிவஞானம் அவர்கள்
அவைத் தலைவர், வடமாகாணசபை,
தலைவர் இளங்கலைஞர் மன்றம்.

**பிரதம விருந்தினர் :**
கௌரவ நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள்
ஆளுநர், வடமாகாணம்

**சிறப்பு விருந்தினர் :**
ஸ்ரீமான் சாயிமுரளி அவர்கள்
இந்திய துணைத்தூதுவர் யாழ்ப்பாணம்

**கௌரவ விருந்தினர்கள் :**
செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர் சிவபூமி அறக்கட்டளை, துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை,காப்பாளர் இளங்கலைஞர் மன்றம்)
இசைவாணர் மு. கண்ணன் அவர்கள்
(ஈழத்தின் சிரேஷ்ட இசையமைப்பாளர்)



**விசேட விருந்தினர்கள் :**
திரு. திருமதி செல்வராசா சவுந்தராதேவி
அவர்கள் (அபிராமி Catering - கனடா)
திருவாளர் தங்கராசா ரூபன் அவர்கள்
தொழிலதிபர் - கனடா
திரு. ச. துவாரகன் கட்டட நிபுணர் SRT Const.

**நிறுவுனர் சிறப்புரை:**
இன்னிசை வேந்தர் பொன்.சுந்தரலிங்கம் அவர்கள்

இந்த மூன்று நாள் நிகழ்வில் ஈழத்தின் சிறந்த கலைஞர்கள் மற்றும் புகழ்பெற்ற இந்தியக்கலைஞர்கள், புலம் பெயர் கலைஞர்கள் இணைந்து வழங்கும் சிறப்புக் கலை நிகழ்வுகளும் நடைபெறும். அனைவரும் கண்டு இன்புற அன்புடன் அழைக்கின்றோம்.

**இளங்கலைஞர் மன்றம்
நல்லூர்**

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மோசமாகப் பயன்படுத்தாதீர்!

## பொலிஸாருக்கு அரசு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜன. 24

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் வாழும் மக்களுக்கு நெருக்கடி மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்த வேண்டாம் என பொலிஸாருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் அரசியல் நோக்கங்களுக்காக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படவில்லை. அந்தச் சட்டத்தை தொடர வேண்டிய அவசியமில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்போது அமுலில் உள்ளது. எனினும், மக்களை பாதிக்கும் வகையில் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு பகுதிகள் குறித்தும் விசேடமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்கீழ் மக்களை தடுத்து வைக்கவும் திட்டமிடவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக நியாயமான சட்டமொன்றை கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கின்றோம். மக்களின் பாதுகாப்புத்தான் எமக்கு முக்கியம். அதற்குத்தான் முதலிடம் கொடுக்கப்படும். இனவாதத்துக்கு இந்நாட்டில் இனி இடமில்லை - என்றார். (ம-44)



# யாழில் இராணுவத்தினரால் 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 24

'க்ளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவத்தினரின் தலைமையில் யாழ்ப்பாணம் நகரைச் சுத்தப்படுத்தும் செயற்பாடு நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டுக்கு இலங்கை பொலிஸ் பிரிவின் சுற்றுச்சூழல் பிரிவினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கினர். நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் ம . பிரதீபன், மேலதிக செயலர் எஸ். சிறிமோகனன் உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர். (ச- 25)

# கேள்வி அறிவித்தல்

**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட்**
**நில வடிவமைப்பு சேவைகள் வழங்குதல், பராமரித்தல்**
**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பலாலி கேள்வி இல : 108/T/2024**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பலாலிக்கான நில வடிவமைப்பு சேவைகள் வழங்குதல், பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதி பெற்ற மற்றும் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட சேவைகள் விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள், ஒப்பந்த நிபந்தனைகள், தொழில் வழங்குநரின் தேவைப்பாடுகள் மற்றும் அளவுகளின் கணக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒப்பந்த காலம் 365 நாட்கள் ஆகும். மேற்குறிப்பிட்ட சேவைகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவு சுமார் ஆறு மில்லியன் ரூபாய்கள் ஆகும்.

*** விலைமனுக்கோரலானது தேசியபோட்டி நடைமுறைக்கேற்ப நடத்தப்படும்.**
*** இடம் - யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பலாலி**

ஆர்வமும் தகைமையும் உள்ள மனுதாரர்கள் மேலதிக தகவல்களை தலைவர், கட்டடக்கலை மற்றும் உட்புற வடிவமைப்பு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,கட்டுநாயக்கா, இலங்கை (தொ.பே. : 0094- 2264420) இல் பெற்றுக்கொள்ளமுடிவதோடு, வழங்கல்சபைப்பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,கட்டுநாயக்கா,இலங்கை இல் 09.00 மணி முதல் 15.00க்கு இடைப்பட்ட நேரத்தில் வேலை நாட்களில் 2025.01.27 முதல் 2025.02.17 இடையில் மனுப்பத்திரங்களைப் பார்வையிடலாம்.

ஆர்வமுள்ள மனுதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் தலைவர்,கொள்முதல் குழு இல 02, வழங்கல்சபைப்பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,கட்டுநாயக்கா இல் 2025.01.27 முதல் 2025.02.17 இடையில் 09.00 மணி முதல் 15.00க்கு இடைப்பட்ட நேரத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக இலங்கை ரூபா மூவாயிரத்து ஐநூறு (ரூ3500) இனை செலுத்தி முழுமையான ஆங்கில மனுப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவு பணமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரட்டையான அனைத்து விலைமனுக்களும் தலைவர்,கொள்முதல் குழு இல.2, வழங்கல்சபைப்பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம்,கட்டுநாயக்கா 2025.02.18 எனும் முகவரிக்கு பி. ப 14.00...அல்லது அதற்கு முன் கிடைக்கப்பெற வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். ஏற்றுகொள்ளும் காலம் முடிவடைந்த பின்னர் மனுதாரர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் விரைவில் திறக்கப்படும்.

அனைத்து விலைமனுக்களும் மனுப்பத்திரத்திரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களால் வழங்கப்பட்ட தொண்ணூறு ஆயிரம் ரூபாய் தொகையில் ஒரு பிணைப்பாதுகாப்புடன் இணைக்கப்பட வேண்டும் அல்லது விலைமனுவுடன் பண வைப்புத்தொகை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அனைத்து ஏலதாரர்களும் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளும் 2025.02.11 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பலாலியில் நடைபெறவிருக்கும் மனுவிற்கு முந்தைய கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,கட்டுநாயக்கா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாப்பவுக்கு பிணை

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட நான்கு சந்தேகநபர்களையும் பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்ற 61 இலட்சத்து 46 ஆயிரத்து 110 ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)


# மரண அறிவித்தல்



தோற்றம்
24 . 11 . 1939

மறைவு
22 . 01 . 2025

## அப்புத்துரை செல்லம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை செல்லம் அவர்கள் நேற்று முன்தினம் (22.01.2025) புதன்கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு அப்புத்துரையின் அன்பு மனைவியும், வைத்திய நிபுணர் சிறீதரன் (Consultant Obstetrician & Gyneacologist, De Soyza Maternity Hospital, Colombo), கெங்காதரன் (Manager, National Savings Bank, Vavuniya), புஷ்பவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாநிதி தயானந்தி (Senior Asst Librarian, University of Colombo), சந்திரவதனா (Manager, National Savings Bank, Chankanai) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியங்கன் (Medical Student, University of Sri Jayewardenepura, Colombo), சாரங்கன் (Student, Royal College, Colombo), ஆரபி (Student, Ladies College, Colombo), தரனியா (Medical Student, Kotelawala Defense University, Colombo), ரக்ஸனா (Student, Kokkuvil Hindu College), வைஸ்ணவி (Student, Biotechnology, SLIIT) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2025) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
Mrs. B. Pushpavathy - 077 047 2583
Dr.A. Sritharan - 071 683 1554
Mr. A. Kengatharan - 075 359 8215

**82A, நாகலிங்கம் வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

(CR/44167) J-1

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 01.05.1953 மறைவு : 24.01.2012

## அமரர் கனகசபை விஜயரெத்தினம் (ஞானம்)

(உரிமையாளர்- ஞானம் பெயின்ற்ஸ்)

பாசமிகு தந்தையே பார்போற்ற பக்குவாமாய் - எமை
வளர்த்த பண்பாளனே
காலமெல்லாம் நாம் நலமாய் வாழ
கனவுகள் பல சுமந்த எங்கள் அன்பு அப்பாவே

பதின்மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எமை விட்டு அகலாது
நித்தமும் எங்கள் நினைவில் நின்று
நிஜத்தில் இறைவனுடன் கலந்த - உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ஞானம் பெயின்ற்ஸ்,**
**558, மானிப்பாய் வீதி,**
**ஓட்டுமடம்.**

**குடும்பத்தினர்.**
விஜய் மஹால்,
பழைய தபாற் கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு.

# வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- **எழுதுநர்**
- **கிராபிக் டிசைனர்**

ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன்
**நாளை (25.01.2025) சனிக்கிழமை**
**காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை**
**நேரில் சமுகமளிக்கவும்.**

**உதயன்**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Vacancy Advertisement for Finance Officer

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

We are looking to recruit Finance Officer. Provide support to ensure the finance Process is delivered on time and to a high standard.

**Finance Officer's Responsibilities are.**

- Accurate and timely recording of financial transactions in HALO's online accounting system
- Ensuring proper and timely archiving of financial records, including digital and physical archives
- In charge of petty cash payments, and support cheque payments including on-line payments of assigned project/s.
- One of the key users in NetSuite for data entry for all payments and reconciliation.
- Ensuring proper maintenance of the record keeping and filing system of the projects including scanning financial documents
- Review and support Jaffna /Killi petty cash book
- Supporting to online payment preparing the monthly cash request
- Assist for preparing salaries for all staff.
- Assisting with internal and external audits
- Dealing with staff enquiries regarding finance and salaries
- Any other duties as required by the Finance Manager
- Checking all payment documents
- Preparing accounts supporting document for filing and scanning
- Supporting procurement activities & Paper works

**QUALIFICATIONS AND COMPETENIES:**

- Minimum qualification of undergraduate degree in Finance and Business Administration; or the equivalent,
- Minimum of 1-3 years of finance work experience.
- Knowledge and/or experience working in the development sector / donor funded projects would be an asset.
- Experience using computerized financial accounting systems, especially online-based ERP systems.
- Extensive knowledge of Microsoft Office, particularly Excel, as well as the ability to learn other software tools readily and implement/use them successfully.

All applications must be submitted to the below address no later than February 05 , 2024 either by Post or via email below. "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi.
hr@halosrilanka.org

(N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணை பிரதேச செயலக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ‘முன்பிள்ளை பருவ சிறார்களின் விருத்தியில் உள, சமூக சூழலின் முக்கியத்துவம்’ என்ற தலைப்பிலான விழிப்புணர்வு நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் வளவாளராக யாழ். மாவட்ட செயலக முன்பிள்ளைப் பருவ இணைப்பாளர் இ.அமலன் , உளவளத்துணை இணைப்பாளர் என்.உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச- 25,9)



ஊர்காவற்றுறை பொலிஸாரின் ஏற்பாட்டில் கொழும்பு லயன்ஸ் கழகத்தினால் வேலணைக் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தரம் - 5 இல் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வேலணை மத்திய கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் திலக் தனபால கலந்துகொண்டார். (ச-22,125)

பளை முகமாலை கிராம அலுவலர் பிரிவில் மனிதாபிமான கண்ணி வெடியகற்றல் செயற்பாடுகள் முடிவுற்று காணிகள் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. இந்த நிலையில் கண்ணிவெடி அகற்றப்பட்டுவரும் காணிகளுக்கு பளை பிரதேச செயலர் தலைமையிலான குழுவினர் நேற்று வியாழக்கிழமை களவிஜயம் மேற்கொண்டு பார்வையிட்டனர். (ச-25,9)





தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலகினரின் ஏற்பாட்டில் ஆடை வடிவமைத்தல் மற்றும் கைவினைப் பொருட்கள் பயிற்சி நெறி சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காட்சிப்படுத்தப்பட்டன. (ச-25,9)



வேலணைப் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுடனான வாக்காளர் மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தலைமையில் பிரதேச செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-25-9)

ஆர்.ஆர்.பிறதர்ஸ் நற்பணி மன்ற அமைப்பினர், அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்துக்கு ஒலிவாங்கி சாதனங்களை நேற்று வியாழக்கிழமை அன்பளிப்பு செய்துள்ளனர். (ச-25,9)





நெடுந்தீவு கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இவ்வாண்டு தரம் ஒன்றில் இணைந்துக் கொள்ளும் 44 மழலைகளுக்கான பாடசாலை சீருடைகள் நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டன. சீருடைகளுக்குரிய நிதியை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள், நெடுந்தீவு பிரதேச செயலகத்தினூடாக வழங்கியிருந்தனர். (ச -25,9)



தூய இலங்கை செயற்றிட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுகளில் நேற்று வியாழக்கிழமை சிரமதானம் இடம்பெற்றது. இதில் பொலிஸார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பளை இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் இணைந்து பளை இந்து ஆரம்ப பாடசாலையிலிருந்து தம்பகாமம் வீதி வரையான பகுதியில் சிரமதானம் மேற்கொண்டனர். (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்செயல்களுடன் தொடர்பு

## பத்து நாள்களில் 2,778 பேர் கைது

கடந்த பத்து நாள்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் போதைவஸ்து மற்றும் குற்றச்செயல்க ளுடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் 2 ஆயிரத்து 778 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது குற்றச்செயல்களுடன் நேரடியாக தொடர்புபட்ட 167 பேர் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 2 ஆயிரத்து 561 பேருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களிடமிருந்து 462 கிலோ கேரளா கஞ்சா, 15 கிலோ ஹஷிஸ், 8 கிலோ ஐஸ் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-6)

## மீனவர் பிரச்சினைகளை தீர்க்காவிடின் போராட்டம்

### கடற்றொழில் அமைச்சரிடம் ரவிகரன் எம்.பி. மனு

யாழ்ப்பாணம், ஜன. 23
கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்ததுடன் மனுவொன்றையும் கையளித்துள்ளார்.
இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயற்பாடுகளால் கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுகின்றன. இதனால் மீனவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.
மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கத்தவறின் மீனவமக்கள் போராட்டங்களில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கரன் மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ச-26,246)

## நீதிபதி...

போதிலும், அது தொடர்பில் அரசாங்கம் கண்டுகொள்ளாமல் அவருக்கு அநீதி இழைத்துள்ளது என்று தீவக சிவில் சமூகம் குற்றஞ்சாட்டியுள்ளது.
யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே தீவக சிவில் சமூகத்தின் சார்பில் கலந்துகொண்ட கருணாகரன் நாவலன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.
இலங்கையின் சிறந்த நீதிபதிகளுள் ஒருவரும் தற்துணிவாக அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது தீர்ப்புக்களை வழங்கி நீதிபதியுமான இளஞ்செழியனுக்கு இந்த அரசு பதவி உயர்வு வழங்காது பழிவாங்கியுள்ளது. அரசின் நடவடிக்கையை ஏற்க முடியாது.
நீதிபதி இளஞ்செழியன் தனது 27 ஆண்டு கால நீதித்துறையின் பதவிக் காலத்தில் பல்வேறு தீர்ப்புகளை அச்சமின்றியும் பாரபட்சமின்றியும் வழங்கியதால் இலங்கை மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருந்தார். ஆனால் அவருக்கான பதவி உயர்வுகள் அந்தந்தக் காலகட்டத்தில் வழங்கப்படாது அரசுகளால் திட்டமிட்ட வகையில் பிற்போடப்பட்டு வந்தன. இதன் உச்சமாக தற்போது அநுர அரசும் தகுதிகள் அனைத்தும் இருந்து திட்டமிட்டு அவரது பதவி உயர்வைத் தடுத்து ஓய்வுநிலைக்கு தள்ள முயற்சித்துள்ளது. இதை எமது மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அரசு பழிவாங்கலைக் கைவிட்டு அவரது பதவி உயர்வை உறுதிப்படுத்த வேண்டும் என்றனர். (ம125,26,20)

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் மற்றும்
சமுத்திரா ரேடர்ஸ் (Hardware)
நிறுவனத்திற்கான வேலை வாய்ப்பு.
ஆண், பெண் இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
**077 077 6469, 077 494 9683**

## 4ஆம் ஆண்டு நினைவலைகளுடன்

மலர்வு 17 . 05 . 1958



உதிர்வு 07 . 02 . 2021

**அமரர் நித்தியானந்தம் லங்கநாதன்**

**திதி - தசமி 24.01.2025**

கனவென மறந்து கடந்துவிடத் தான்
நினைக்கின்றோம் அப்பா - ஆனாலும்
எங்களால் முடியவில்லை
ஆண்டுகள் நான்கு கடந்தாலும் மனம் ஏற்க மறுக்கின்றது அப்பா
உங்கள் இழப்பினை - நீங்கள் எங்களோடு
எங்களுக்காக வாழ்ந்த அந்த நாட்கள் ஒவ்வொன்றும் - மீண்டும்
எமக்கு கிடைத்திடாதா என்ற ஏக்கத்தோடு
பிள்ளைகள் நாம் பிரார்த்திக்கின்றோம் - அப்பா
உங்கள் ஆத்ம சாந்திக்காக
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**அம்பன், குடத்தனை.** (CR/29604) J-1 **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## வடிவேல் செல்வராசா (நாதஸ்வர வித்துவான்)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட "நாதஸ்வர வித்துவான்" வடிவேல் செல்வராசா அவர்கள் கடந்த (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புளியங்கூடல் "தவில் வித்துவான்" காலஞ்சென்ற M.வடிவேல் மற்றும் இராசாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் பாமினி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கீர்த்தனா, சங்கீரணி, பாஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயானந்தன், துஷ்யந்தன் (பிரான்ஸ்), கஜாதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் கிருஷத்வனி, கரிஷ்மன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் செல்வராணி,செல்வரத்தினம் (கனடா), வரதராஜா, முருகதாஸ் (மலேசியா), தவராசா, ஆனந்தராசா (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாதஸ்வர வித்துவான் மகேந்திரன் (கொழும்பு), சுமதி (கனடா), ஜெயந்தி, மனோரஞ்சினி (மலேசியா), தயானந்தி, ஜெசிந்தா (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் பிரசன்னாவின் (அவுஸ்திரேலியா) மாமாவும் சாரங்கன், லதீசன், சாருஜன், பிரியங்கா, சார்கவி, குருப்பிரியா, குகப்பிரியா, விந்துயா, சஜீவன், சங்கீர்த்தன், ஆஷகன், அட்சயன், அனஞ்சயன், அர்ச்சனா, ஆகாஷன், ஹறிசன், துலக்ஷன் ஆகியோரின் பெரியப்பாவும், சாய்கரன், ஸ்ரீயான், சாதனா, பிரித்விஷா, வாஷினி, இஷானி, திவானி, யுவநாதி, ஜெயஷினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24.01.2025) வெள்ளிக்கிழமை இல, 124/15, செல்லர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.30 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி
இல. 124/15 செல்லர் வீதி,
நல்லூர்.
077 491 2816, 077 968 2939

தகவல்:
தாய் V.இராசாம்பாள்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைவிழா

யாழ்ப்பாணம், ஜன. 24
நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசைவிழாவும், புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்புவிழாவும், மன்ற கலா மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முதல் 27 ஆம் திகதி திங்கட்கிழமை வரை காலை மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வு, மன்றத்தின் தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் மன்ற கலாமண்டபத்தில், நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக இந்தியத்துணைத்தூதுவர் சாய்முரளி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் மாலை 4 மணிக்கு மங்கல இசை, இசைக்கச்சேரி, கலைஞர் கௌரவிப்பு, இசையரங்கு போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.


நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக யாழ்.மாவட்டச்செயலர் ம.பிரதீபன், மருத்துவ நிபுணர் எஸ்.சிவசுதன், சிரேஷ்ட விரிவுரையாளர் க.பரமேஸ்வரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

## முல்லையில் இருவர் கசிப்புடன் கைது

முல்லைத்தீவு, ஜன. 24
முல்லைத்தீவில் இருவேறு இடங்களில் இருவர் கசிப்புடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோம்பாவில் பகுதியில் கசிப்பு வைத்திருந்த இளைஞர் ஒருவர் 5 லீற்றர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டார். அதேவேளை முல்லைத்தீவு - கேப்பாபிலவுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கசிப்புடன் முள்ளியவளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 10 லீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



சாந்திகம் உளவளத்துணை அமைப்பினரால் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான உளவள ஆலோசனைச் செயலமர்வு வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. செயலமர்வில் வளவாளராக யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாபூசணம் க.இ.கமலநாதன் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார். (ச-25,9)

## பொலிஸாரின் மெத்தனம் முற்றுப்புள்ளி வையுங்கள்

கொழும்பு, ஜன. 24
மன்னாரை கிலிகொள்ள வைத்த பழிவாங்கும் திட்டத்திலான துப்பாக்கிச்சூட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். பாதுகாப்புத் தரப்பின் அசமந்தபோக்கால்தான் படலம் தொடர்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றில் நேற்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கு, கிழக்கில் முப்படைகள் பொதுமக்களின் காணிகளை அபகரித்துள்ளன. அபகரிக்கப்பட்ட நிலங்கள் பொதுமக்களுக்கு மீள வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் 'தூய இலங்கை' திட்டம் வெற்றியளிக்கும். மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்புத் தரப்பின் மெத்தனப்போக்கால்தான் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய சம்பவங்களை உடனடியாக நிறுத்துவதற்குரிய நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ச-44)

### முல்லைத்தீவில்
## ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 24
ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் வெலிஓயா மணலாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெலிஓயா பொலிஸார் மேற்கொண்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 60 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-125)

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் அதிபர் பசுபதி தர்மபூபதியின் மணிவிழா ஏற்பாட்டுக் குழுத்தலைவர் விஜயகுமாரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-40-159)




## கசிப்புக்காய்ச்சுமிடம் உடுவிலில் முற்றுகை
### 300 லீற்றர் கோடா மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 24
மானிப்பாய் உடுவில் பகுதியில் கசிப்புக் காய்ச்சுமிடம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் கசிப்புக் காய்ச்சி விற்பனை செய்யப்படுவதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்குள்ள வீடொன்றை முற்றுகையிட்டு சோதனை நடத்தினர். இதன்போது 300 லீற்றர் கோடா, 15 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

அத்துடன் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 28 வயதுடைய சந்தேகநபர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். (ச-125,27,66)





பளை இத்தாவில் பனைத்தும்பு உற்பத்தி நிறுவனத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் பளை பிரதேச செயலாளர் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம அலுவலர் உட்பட்டோர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு குறைபாடுகளைக் கேட்டறிந்தனர். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கொல்லப்பட்டால் அரசாங்கமே பொறுப்பு!

## அர்ச்சுனா எம்.பி. ஆவேசம்

கொழும்பு, ஜன. 24

எனக்கு இன்னும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. எனவே, நான் கொல்லப்பட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் நேற்று ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு தனக்கு நேரம் ஒதுக்கப்படாமை தொடர்பில் நேற்று சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பி கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 64 நாள்கள் கடந்துள்ளன. மக்கள் பிரதிநிதியான எனக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை. இது தொடர்பில் முறைப்பாடு முன்வைத்து, 36 நாள்களுக்கு பின்னரே சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 64 நாள்கள் கதைப்பதற்கு இடமளிக்காமல் இருப்பது அரசாங்கத்தின் வெட்கம்கெட்ட செயலாகும். இந்த அரசாங்கத்துக்கு எனது மனதால் கொடுக்கும் சகல ஆதரவையும் இன்றிலிருந்து (நேற்று) விலக்கிக்கொள்கின்றேன். இனி உண்மையான எதிர்க்கட்சி உறுப்பினராகச் செயற்படுவேன்.

எனக்கு எதிராக 24 வழக்குகள் போடப்பட்டுள்ளன. நான் மருத்துவராக இருந்தபோது ஒரு வழக்குக்கூட எனக்கு எதிராகப் பதிவாகவில்லை. இவை தனிப்பட்ட ரீதியில் போடப்பட்ட வழக்குகள் அல்ல. ஊழல், மோசடிகளுக்கு எதிராகக் கதைக்கப்போய் விழுந்தவையாகும்.

எனக்கு புலி முத்திரை குத்தப்படுகின்றது. 'புலி என்றால் என்னை கைது செய்யுங்கள். இல்லையென்றால் துப்பாக்கிச்சூடு நடத்துங்கள். 80 காலப்பகுதியில் இவர்கள் (ஜே.வி.பி) கொலை செய்துள்ளார்கள். முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான எமது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். என்னையும் கொல்லுங்கள். எனக்கு இன்றுவரை பாதுகாப்பு வழங்கப்படவில்லை. என்னை எவராவது கொன்றால் இந்த அரசாங்கம்தான் பொறுப்புக்கூற வேண்டும்' - என்றார். (அ-ம-44)

# கிளிநொச்சி வர்த்தகர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜன. 24

கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்கள் நேற்று வியாழக்கிழமை கடைகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

வெளி மாவட்டத்திலிருந்து வருகைதரும் பல வியாபாரிகள் எந்தவித அனுமதியும் பெறாமல் வியாபாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் கிளிநொச்சி நகர வர்த்தகர்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இவர்களை உடனடியாக இப்பகுதியில் இருந்து வெளியேற்ற வேண்டும் - என்றனர். இதுதொடர்பில் கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலருக்கும் மனுவொன்றை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையளித்தனர். (ச-25,113)

### பெண்களிடம்...

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இரண்டு பெண்களைத் தாக்கி, அவர்களிடம் இருந்து திறன்பேசிகள் உள்ளிட்டவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் ஓமந்தைப் பொலிஸாருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் அடுத்த சிலமணி நேரங்களில் சந்தேகநபர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-12-110)

### அமைச்சர்கள்...

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமர்வு வேளைகளில் காலை உணவு, மதிய உணவு மற்றும் தேநீருக்காக நாளொன்றுக்கு 450 ரூபா அறிவிடப்பட்டுவந்தது. புதிய ஏற்பாட்டுக்கு அமைய காலைஉணவுக்காக 600 ரூபாவும், பகல் உணவுக்காக 1,200 ரூபாவும், மாலை நேநீருக்காக 200 ரூபாவும் அறிவிடப்படவுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி முதல் புதிய உணவுக் கட்டணம் அமுலுக்கு வரவுள்ளது.

அதேபோல், அமைச்சர்களின் எரிபொருள் ஒதுக்கீடுகள் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கை என்பனவும் குறைக்கப்பட்டுள்ளன. இதன்படி அமைச்சர்களின் உதவியாளர்களின் எண்ணிக்கை 15 பேரில் இருந்து 12 பேராகக் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அமைச்சர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 2 ஆயிரத்து 250 லீற்றரில் இருந்து 900 லீற்றராகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44-6)

### பெறுபேறுகள்...

மாலை வெளியாகின. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்றது. 2 லட்சத்து 44 ஆயிரத்து 92 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

வழமையாக நள்ளிரவிலேயே புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகுவது வழமை. இம்முறை மாலைநேரத்தில் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

### மருந்துத்...

செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இந்த விடயத்தை அமெரிக்கத் தூதுவரிடம் தெரியப்படுத்தியுள்ளார்.

'நாட்டின் இலவச சுகாதார சேவையை வலுப்படுத்துவதன் மூலம் தரமான மற்றும் சிறந்த சுகாதார சேவையை பொதுமக்களுக்குத் தொடர்ச்சியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன், சுகாதார சேவையுடன் ஆயுள்வேத வைத்திய முறையையும் ஒன்றிணைத்து சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் விசேட செயற்றிட்டமும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது' என்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் கூறியுள்ளார்.

அமைச்சரின் கருத்துக்களைக் கேட்டறிந்த அமெரிக்கத் தூதுவர், இலங்கையின் சுகாதார சேவைக்குத் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார். அத்துடன், இலங்கையின் சுகாதார சேவைகளுக்கு அமெரிக்கா தன்னாலான பங்களிப்பை வழங்கும் என்றும் அமெரிக்கத் தூதுவர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கூறியுள்ளார். (அ-ம-இ)

### பொலிஸ்..

கிளிநொச்சியைச் சேர்ந்த பெண்ணொருவர் மருதானை பொலிஸ் நிலையத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நாடாளுமன்றத்தில் வைத்துச் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி - திருவையாறு பகுதியைச் சேர்ந்த பொன்னையா கலாதர்ஷனி (வயது-32) என்ற பெண் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார். இந்த விவகாரம் நாடளாவிய ரீதியில் பூதாகரமாக வியாபித்துள்ளது.

அந்தப் பெண் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும், இந்த இறப்பின் பின்னணி தொடர்பில் பலரும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

'மருதானைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பெண் தவறான முடிவெடுத்து உயிரிழக்கவில்லை. இது கொலையாக இருக்க வாய்ப்புக்கள் உள்ளன. இந்த விடயத்தில் நீதியான விசாரணைகள் இடம்பெறவேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

சிறீதரனின் குற்றச்சாட்டுக்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால திட்டவட்டமாக மறுத்துள்ளார். அந்தப் பொலிஸ் நிலையத்தில் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

### திலீபனின்...

திகதி நான் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தேன். எனினும், அன்றையதினம் என்னால் சமுகமளிக்க முடியாது என்பதால், ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்கு (நேற்று) விசாரணையை மாற்றித்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று (நேற்று) எனக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி தொடர்பில் விசாரிக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்று 16 மாதங்களின் பின்னர் இடம்பெறும் இந்த விசாரணைக்கு எனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தேன்.

நான்கு மணித்தியாலங்கள் வரையில் இடம்பெற்ற விசாரணையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் கேள்விகளுக்கு எனது பதிலை வழங்கியிருந்ததுடன் தியாக தீபம் திலீபனின் அரசியலை முன்னெடுக்கவேண்டியது எம் ஒவ்வொருவரினதும் பணியாகும் எனும் அடிப்படையில் மிகத் தெளிவாக எனது தரப்பு நியாயத்தை முன்வைத்திருந்தேன்.

எனது அரசியல் வேணவாவை விடுதலைப் போராட்டமும் திலீபனும் காவிநின்றதாலேயே நான் அதனை ஆதரித்திருந்தேன். இன்னும் ஆதரிக்கிறேன். இனியும் ஆதரிப்பேன் - என்றார். (அ-ம-26)

### பயங்கரவாதச்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற மனுவில் தேசிய மக்கள் சக்தியினரும் அன்று கையொப்பமிட்டனர். தெற்கிலுள்ள மாவட்டங்களுக்கு அந்தக் கட்சியின் பிரதிநிதிகள் என்னுடன் வந்திருந்தனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்கிறார்கள். ஆனால் அதற்குப் பதிலாக புதிய சட்டம் கொண்டுவருவார்களாம். புதிய சட்டம் கொண்டுவருவது பற்றி அன்று கூறப்படவில்லை.

அரசியற்கைதிகள் இல்லை என நீதி அமைச்சர் குறிப்பிடுகின்றார். இது ஏற்புடைய அறிவிப்பு அல்ல. இப்படியான பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அவ்வாறு இல்லையேல் சிறிய குழுவாக இருந்தாலும் நாம் உரிய நடவடிக்கையில் இறங்குவோம். அத்துடன், மதுபான அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு பரிந்துரைத்த அரசியல்வாதிகளின் பெயர்களையும் வெளியிடவேண்டும்' - என்றார். (அ-ம-44)

### கோப்பாயில்...

யில் ஈடுபட்ட வன்முறைக்குழுவைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்ததும், வீட்டில் அயலவர்கள் சம்பவ இடத்துக்கு வந்ததைத் தொடர்ந்து அந்தக் குழு தப்பியோடியுள்ளது. கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ச-125-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். பல்கலைகழகத்தில் சர்வதேச சட்டமாநாடு

**யாழ்ப்பாணம், ஜன. 24**

**யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு, யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஹூவர் கலையரங்கில், நாளை சனிக்கிழமையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விவரிப்பு பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.**

இதன்போது, மாநாடு தொடர்பில் சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை விளக்கமளிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகச் சட்டத்துறை, இந்தியாவின் புகழ் பூத்த சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் 'முறை செய்' என்ற தலைப் பில் இந்த மாநாட்டை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. மாநாட்டின் முதல்நாள் நிகழ்வில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன பிரதம விருந்தினராகவும் , தகவல் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் ஹிஷாலீ பின்டோ ஜெயவர்த்தன சிறப்புவிருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

ஆளுகை நிலைமாற்றம் தொடர்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டியான் ஷாவும், இலத்திரனியல் நிலைமாற்றம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி சுனில் அபேரட்னவும் சிறப்புரைகளை ஆற்ற வுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வின் மற்றுமொரு சிறப்பம் சமாக மக்களின் அரசியலமைப்பு , அதன் எதிர்காலம் எனும் தலைப்பிலான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

அந்தக் கலந்துரையாடலில் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீட முன்னாள் பேராசிரியர் வீ.த. தமிழ் மாறன் , ஜனாதிபதி சட்டத்தரணி ஜெயந்தாடி அல்மெய்டா குணரட்ண, பேராதனைப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கலன சேனாரட்ண ஆகியோர் உரையாளர்களாகவும் மாற்றுக் கொள்கை நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் பவானி பொன் சேகா நெறியாளராகவும் பங்குகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனக் டீ சில்வா பிரதம விருந்தினரா கவும் , இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்ட நிலையியற் குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சமந்தா உனம்பூவே சிறப்புவிருந்தினரா கவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் கலாசார நிலைமாற்றம் தொடர்பாக சமத்துவத்திற்கும் நீதிக்குமான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷாமலா கோமஸ்ம், முறையியல் நிலைமாற்றம் தொடர்பில் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் நாகநாதன் செல்வக்குமரன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர். அத்துடன் நிலைமாற்றம் , சவால்களும் வாய்ப்புக்களும் என்னும் தொனிப்பொருளிலான விசேட கலந்துரையாடலொன்றும் இடம்பெறவுள்ளது. இதில் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் பேராசிரியர் வீ.த.தமிழ் மாறன் , கொழும்புப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி , யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி முத்துக்கி ருஷ்ணா சர்வானந்தன், சட்டத்தரணி சந்துணி ஆகியோர் வளவாளர்களாகவும், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறை மூத்த விரி வுரையாளர் கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் நெறியாளராகவும் பங்கேற்கவுள்ளனர்.

மாநாட்டில் இலங்கை மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கங்கள் பொருளாதார வளர்ச்சியும் முதலீடும், சுற்றுச்சூழல் சவால்கள், உரிமைகள், நீதி, குடும்பச்சட்ட மும் பாரபட்சமும், செயற்கை நுண்ணறிவும் தொழில்நுட்பமும், புதிய எண்ணக்கருக்கள் எனும் 7 தலைப்புகளின் கீழ் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மாநாட்டின் மற்றொரு அங்கமாக மாற்றுப் பிணக்குத் தீர்வு முறைகள் பற்றிய குறிப்பாக மத்தியஸ்தம் தொடர்பான சிறப்பு அமர்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. நிகழ்வில் இந்தியாவைச் சேரந்த நிபுணர்கள் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். சர்வதேச சட்ட மாநாட்டில் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றி பயன் பெற்ற முடியும் - என்றார்.

(ச-25 , 20)

## பேருந்தில் பயணித்து நாடாளுமன்றம் சென்ற எம்.பி.

வவுனியா, ஜன. 24

தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் பேருந்தில் பயணித்து நாடாளுமன்றத்துக்குச் சென்றுள்ளார்.

அவரது செயற்பாடு சமூக ஊடகங்களில் பரலாரும் பாராட்டப்பட்டு வருகின்றது. (ம-18)

**A/L- வரலாறு**

M. **பத்மன்** B.A (Hons) History, P.G.D.E, M.E.D, M.A (Hons) History

**கற்பிக்கும் இடங்கள்**

- D.M.I, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
- BITSMANS மானிப்பாய்
- உயர்கலைக் கல்லூரி கொக்குவில், குளப்பிட்டி.
- Online Zoom Class

A/L- 2K25, 2K26 பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
A/L 2K25 வகுப்பிற்கு நேரடியாக சமுகமளிக்க முடியாத வெளிமாவட்ட மாணவர்களுக்கு மட்டும் Zoom வகுப்பு நடைபெறும்.

**தொடர்பு: 077 482 5587**

(CS 23541) P-1

**வேலைவாய்ப்பு**

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- **இயந்திர இயக்குநர் (Machine Maintainer)**
- **உதவியாளர் (Helper)**
- **பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்**

ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன்
**இன்று / நாளை மறுதினம் (24,25.01.2025)**
**காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை**
**நேரில் சமுகமளிக்கவும்.**

**உதயன்**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 25 . 02 . 1936 | 25 . 12 . 2024 |



கடந்த 25.12.2024 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

### அமரர் மாணிக்கம் அன்னம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் தங்களை அழைக்கின்றோம்.

**அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இல.3, பண்டாரக்குளம் மேற்கு வீதி,**
**நல்லூர் வடக்கு, நல்லூர்.**

**குடும்பத்தினர்**
**077 477 1218**
**077 978 9662**

(Cs/57301) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சுமனையில் 24.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org